பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஆடு மார்கழி மீ 07 உ சனிக்கிழமை (22-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 26

## ஆனையிறவில் விமானக்குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், டிச. 22

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை போர் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. [ஒ-3]

## திருமலைக்கு புதிய தளபதி

கொழும்பு, டிச. 23

திருகோணமலை மாவட்டத்தின் புதிய இராணுவத் தளபதியாக பிரிகேடியர் சி. டரணசம நியமிக்கப்பட்டிருக்கிறார். [உ-எ]

## மாங்குளம் வெற்றிநாள் இன்று

மாங்குளம் முகாம் தகர்க்கப்பட்ட ஒரு மாத நிறைவு— வெற்றி நாளும் கரும்புலி லெப். கேணல் போர்க்கின் நினைவு நாளும் இன்று வட பகுதி எங்கும் கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி குடா நாட்டில் பல நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன. [ஒ]

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும்

# சமரச முயற்சியில் மேற்குலக நாடுகள்!

## பிரிட்டிஷ் தூதுவர் முன்நிற்கிறார்

கொழும்பு, டிசம்பர் 22

இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் மேற்குலக நாடுகள் சில கூட்டாக ஈடுபட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

தலைநகரில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களைச் சேர்ந்த இராஜதந்திரிகள் பலர், கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதுவரின் தலைமையில் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரமுகர்கள் உயர்மட்டத் தலைவர்களிடம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் சமரசத்திட்டம் ஒன்றை சமர்ப்பித்திருப்பதாகவும்-

இது தொடர்பாக ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடு என்ன என்பதை அறிந்த பின்னர் அவர்கள் அடுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவர் என்றும் தெரியவந்தது

★ வடக்கு, கிழக்கில் உடனடியாக இராணுவ நடவடிக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆயிரம் தமிழர் கிழக்கில் கைது!

கிழக்கு மாகாணத்தில் தற்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின் போது ஆயிரத்துப் பதினைந்து தமிழர்களை ஆயுதப் படையினர் கைது செய்திருப்பதாக ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கிறது.

மட்டக்களப்பு கடற்கரைப் பகுதியில் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம்பெற்றதாகவும்-

ஐந்து படகுகள் வரை அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது,

இந்தத் தாக்குதல்களினால் பொது மக்களுக்கு ஏற்பட்ட உயிர், உடைமை சேதங்கள் குறித்து விரிவான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## செஞ்சிலுவை வாகனத்தில்

## அரச அதிபர்கள் கொழும்பு செல்ல அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், டிச. 22

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தில் யாழ். கிளிநொச்சி அரச அதிபர்கள் கொழும்பு செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கவில்லை என்று தெரியவருகிறது.

இன்று கொழும்பு செல்லவிருந்த சர்வதேச செஞ்சிலு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மாங்குளம் முகாம் தகர்ப்பு

# ஒரு கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் புலிகளால் மீட்பு!

யாழ்ப்பாணம், டிச. 22

மாங்குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தகர்த்த போது ஒரு கோடி ரூபா பெறுமதியான — 153 சுடுகலன்கள் உட்பட — பெருமளவு ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள், இராணுவ உபகரணங்கள் ஆகியவை விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக ஸ்ரீலங்கா படையினரிடமிருந்து விமான எதிர்ப்புத் துப்பாக்கியான — 50 கலிபர் துப்பாக்கி — விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது.

இது தவிர, ஏ.கே. ரக ரைபிள்கள்— 90, மோட்டார்கள் — 17, ஆர். பி. ஜிக்கள் — 7, எல். எம். ஜி. ரக துப்பாக்கிகள்—22, 303 ரக துப்பாக்கிகள் — 7, ரிபீட்டர் —7, வேட்டைத் துப்பாக்கிகள் —2 உட்பட ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட ரவைகள், பெருந்தொகையான இராணுவ உப பொருள்கள் மீட்கப்பட்டன.

அவற்றின் முழு விவரங்களையும் விடுதலைப்புலிகள் வெளியிட்டுள்ளனர். அவை வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ 50 கலிபர் | - | 01 |
| 50 கலிபர் மேலதிக சுடுகுழல் | - | 01 |
| 50 கலிபர் முக்காலி | - | 01 |
| 50 கலிபர் ரவை | - | 1440 |
| ★ ஜி பி எம். ஜி | - | 04 |

[4ஆம் பக்கம் பார்க்க]

## வல்லையில் ஷெல்கள்!

யாழ்ப்பாணம், டிச. 22

பலாலியில் இருந்து கீரிமலை மற்றும் வடமராட்சிப் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் இரவும் நேற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கீரிமலைப் பகுதியில் விழுந்த ஷெல்களினால் வீடுகள் சில சேதமடைந்ததாகத் தெரியவருகிறது.

நேற்றுக் காலை வல்லைப் பகுதியிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. [ஒ-15 3]

# 110 சிப்பாய்கள் உயிரிழந்தனர்

யாழ்ப்பாணம், டிச. 22

மாங்குளம் முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின் போது 110 க்கும் அதிகமான ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். எஞ்சியோர் காட்டுக்குள் தப்பி ஓடிவிட்டனர்.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ ஏடான ''விடுதலைப் புலிகள்'' பத்திரிகை இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

தாக்குதல் நடந்த சமயம் முன்னூறுக்கும் அதிகமான இராணுவத்தினர் அந்த முகாமில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முகாம் தகர்ப்பையடுத்து காட்டுக்குள் தப்பி ஓடிய சிப்பாய்களில் ஒரு பகுதியினர் தாக்குதல் நடந்து மூன்று நாட்களின் பின்

(3ஆம் பக்கம் பார்க்க)

# முகாம் தகர்க்க 62 புலிகள் களப்பலி!

## 6 மாதப் போரில் 108 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச. 22

கடந்த 22 ஆம் திகதி இடம் பெற்ற மாங்குளம் இராணுவ முகாமைக் கைப்பற்றும் — வெற்றிச்சாதனைக்காக — கரும் புலி லெப்டினன்ட் கேர்ணல் போர்க் (மா. அரசரத்தினம் - சேமமடு) உட்பட 62 புலிகள் களப்பலியானார்கள்.

இவர்களில் 17 பேர் பெண் போராளிகள்.

பலம் வாய்ந்த மாங்குளம் இராணுவ முகாமை அழிப்பதற்காக கடந்த ஆறு மாதங்களில் இரண்டு தடவைகள் பாரிய தாக்குதல் முயற்சிகளை விடுதலைப் புலிகள் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் — ஸ்ரீலங்கா அரச படைகள் யுத்தம் தொடங்கி ஆறாவது நாளில் — கடந்த ஜூன் 16 ஆம் திகதி — நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் முயற்சி வெற்றியளிக்கவில்லை. அந்த முயற்சியில் 30 போராளிகள் வீரமணத்தைத் தழுவிக் கொண்டனர்.

அன்று முதல் கடந்த 22 ஆம் திகதி

[3ஆம் பக்கம் பார்க்க]

## ஜி. சீ. ஈ. பரீட்சை மார்ச் 28 இல்?

யாழ்ப்பாணம், டிச. 22

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விசேட ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையை மார்ச் மாதம் 28 ஆம் திகதி நடத்த பரீட்சை ஆணையாளர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க, வட பகுதியில் நிலைமை வழமைக்குத் திரும்பி விட்டதாக மாகாண கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்தால் மட்டுமே பரீட்சையை நடத்த முடியும் என்று யாழ். கல்வி அலுவலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (ஒ-3)

## ஆசிரியர்களுக்கு டிசம்பர் சம்பளம்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ்-மாவட்ட ஆசிரியர்களுக்கான டிசம்பர் மாதச் சம்பளக் காசோலைகள் நேற்று கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டன. [ஒ-3]

## கல்வி டிப்ளோமா பயிற்சி நேர்முகப் பரீட்சை இங்கு!

### முழு நேரமாகப் பயிலவும் வசதி

யாழ்ப்பாணம், டிச. 22

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை முதல் தடவையாக இம்முறை யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி இந்த நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆண்டு 6 புலமைப்பரிசில் பரீட்சை பெப்ரவரியில்

ஆண்டு ஆறு வகுப்பு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சையை பெப்ரவரி மாதத்தில் நடத்த கல்வித் திணைக்களம் முயற்சி மேற்கொண்டிருப்பதாக அறியவருகிறது.

வழமையாக ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படும் இந்தப் பரீட்சை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைபெறவில்லை என்பது தெரிந்ததே. [உ-3]

## படை அதிகாரிகள் ஒன்றாக பயணம் செய்வதற்குத் தடை!

### அமைச்சர் ரஞ்சன் உத்தரவு

பாதுகாப்பு படைகளின் சிரேஷ்ட அதிகாரிகள் இனிமேல்- ஒன்றாக- குழுக்களாக வாகனங்களில் பிரயாணம் செய்யக்கூடாது.

மேற்கண்ட உத்தரவை பாதுகாப்பு துணை அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்தினா விடுத்திருக்கிறார்.

திருகோணமலையில் கடந்த வாரம் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தில் பிரிகேடியர் ஒருவரும், சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரும் மற்றும் இரண்டு படை அதிகாரிகளும் ஒன்றாக உயிரிழந்ததை அடுத்தே அவர் இந்த உத்தரவை விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## மாலைதீவில் விடுதலையான

## 33 புளொட் உறுப்பினர்கள் படையினர் பாதுகாப்பில்!

கொழும்பு, டிச. 22

மாலைதீவில் அதிரடித் தாக்குதல் மூலம் புரட்சிச்சதி முயற்சியில் ஈடுபட்டதற்காக தண்டனை விதிக்கப்பட்ட புளொட் உறுப்பினர்களில் 33 பேர் விடுவிக்கப்பட்டு நேற்று முன்தினம் கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டனர்.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் விசேட விமானத்தில் அழைத்து வரப்பட்ட இவர்கள் படையினரின் பாதுகாப்புடன் தங்க வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார். [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் தேவை

பெண்கள் குழந்தைகள் ஆகியோரது சகல உடைகளையும் நாகரிகமான முறையில் வெட்டி தைக்கக்கூடிய அனுபவம் வாய்ந்த பெண் தேவை. நேரில் வரவும். 'திருமகள் றேடர்ஸ்' (கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட்முன்) கல்வியங்காடு. (15183)

### மணமக்கள் தேவையா

எம்மிடம் மணமக்கள் இருக்கிறார்கள். தொடர்பு கொள்க: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [15165]

### வாடகைக்கு

யாழ். கச்சேரி வடக்கு ஒழுங்கையில் உள்ள 25ஆம் இலக்க வீட்டில் ஒரு பகுதி [ஒரு குடும்பம் வசிப்பதற்கு போதிய வசதியுள்ள] வாடகைக்கு கொடுக்கப்படவுள்ளது. விபரங்களுக்கு ச. தம்பித்துரை 8/2, 3 பரின்ப நாயகம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [15177]

### கம்பியூட்டர் வகுப்புக்கள்

Basic புதிய வகுப்புக்கள் 19-12 90 [திங்கள், புதன், வெள்ளி] 22-12-90 [சனி ஞாயிறு] ஆரம்பமாகின்றன. மேலதிக விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். Unikco Computer Centre 37, Clock Tower Road Jaffna. (வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்). (15149)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15153

### விற்பனைக்கு

நல்ல இனம் Jersey பசு 9 போத்தல் பால் தரக் கூடியது 18-12-90 அன்று கன்று ஈன்றது. நல்ல இன ஆடு இரு நேரம் இரு போத்தல் பால் தரக்கூடியது. இரு கிழமைக்குள் குட்டி போடக்கூடியது. தொடர்பு: க. தியாகராசா, சத்திய சாட்டுச் சந்தை வீதி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (15147)

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 156 A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

### சன்லைட் றைக்கிளீனர்ஸ்

யாழ் நகரில் தமது வழமையான சேவைகளை [போட்டோ ஸ்ரற் பிரதிகள் எடுப்பது உட்பட] ஆரம்பித்துள்ளனர். என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன். 23, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். C/5553)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [15117]

### மணமகள் தேவை

யாழ். இந்து உதயத்தில் செவ்வாய் குற்றமுள்ள இரசபாவம் கூடிய B sc மணமகனுக்கு பெண் தேவை. வயது 28 பூரம் நட்சத்திரம் தொடர்பு ABCDE 328 நாவலர் றோட், ஆனைப்பந்தி (15195)

---

# குருத்துவ வைர விழா



## அருட் திரு. வில்லவரசிங்கம் அ.ம.தி. (O.M I.)

இறைவனின் அழைப்பை ஏற்று 60 ஆண்டுகள் குருவாக சேவைபுரிந்து 22 மார்கழி 1990 இல் குருத்துவ வைர விழாவைக் கொண்டாடும் இவர், இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அமல மரித் தியாகிகள் சபையின் முதிர்ந்த உறுப்பினருமாவர். பல கடினமான பங்குகளில் நீண்ட கால பணியாற்றி பலரதும் நல்வாழ்வுக்காக உழைத்த ஒரு தொண்டர். உதட்டில் கண்டிப்பும், உள்ளத்தில் கருணையும் கொண்டு வழி நடத்தும் ஒரு சிறந்த நிர்வாகி செபமாலைத்தாசர் ஆச்சிரமத்திலும், மருதமடுத்திருப் பதியிலும், யாழ். மறை மாவட்ட திருமண நீதிமன்றத்திலும் இவர் ஆற்றிய சிறந்த சேவை குறிப்பிடத்தக்கது.

தற்போது கொழும்புத்துறை மத்தியூஸ் இல்லத்தில் ஓய்வு பெற்றிருக்கும் இவரது வயது 86 முத்த பருவத்திலும் இளமை உள்ளமும் பொறுமை உணர்வும், தெய்வபக்தியும் இவரது ஆளுமையின் சிறப்புகளாகும் இவர் நீடிய ஆயுளும், நலமும் பெற்று நற்பணிகள் தொடர இறைவன் இவருக்கு சகல அருட்கொடைகளையும் வழங்க வேண்டி வாழ்த்துகின்றோம்.

[14865] விக்ரர் யோசப் குடும்பத்தினர்.

---

# கல்வாரியின் தொனி

வழங்கும்

# "ஓசன்னா பாடுவோம்"

## கிறிஸ்மஸ் கீத நிகழ்ச்சி

இடம்: கல்வாரி தேவாலயம் - யாழ்ப்பாணம்

காலம்:- 23 - 12 - 90

நேரம்: காலை 9:00 மணி

வாருங்கள் தேவ ஆசி பெறுங்கள்

போதகர்
கல்வாரி தேவாலயம்,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(15200)

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## மருத்துவபீடம்

# பரீட்சைகளின் திகதிகள்

மருத்துவபீட மூன்றாம் ஆண்டுப் பரீட்சை (பகுதி 11)
17 - 01 - 1991 இலும்
மருத்துவபீட இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சை
21 - 01 - 1991 இலும் நடைபெறும்

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட மாணவர்களுக்கு மூன்றாம் ஆண்டு (பகுதி 11) மருத்துவ பரீட்சையும், இரண்டாம் ஆண்டு மீள் பரீட்சையும் கொழும்பில் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நடத்தப்படும் ஏனைய மருத்துவ மாணவர்கள் இந்தப் பரீட்சைகளுக்குக் கொழும்பில் தோற்றமுடியாது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலேயே தோற்ற வேண்டும்.

- பதிவாளர்

(சி/5551)

---

# தேவை

## அரசடி விநாயகர் ஆலயம்

மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி ஆலயத்திற்கு மனேஜர் உடனடியாகத் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

50 வயதுக்கு மேற்பட்ட இளைப்பாறிய அரச ஊழியராகவும், சைவசமயத்தவராகவும், கோயிலுக்கு அண்மையில் இருப்பவராகவும், மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

● ஏனைய விபரங்கள் நேரில் ●

180, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
20-12 90

க செ. சோமசேகரம்,
சட்டத்தரணி,
தலைவர்.

[15191]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

## றோசா சாமிநாதர்

(செல்லாச்சி)

[ஓய்வு பெற்ற ஆசிரியை]

பிறப்பு: 07-12-1913

இறப்பு: 23-11-1990



'உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம்
கொள்பவன்
இறப்பிலும் உயிர்
வாழ்வான்'

இவரின் ஆத்ம சாந்திக்காக குருநகர் புனித திரேசா ஆலயத்தில் 22-12 90 சனிக்கிழமை மாலை 4 30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். இரங்கற் திருப்பலியில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மன்றாட வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருற்று வருந்தும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி, உறவினர்கள், நண்பர்கள்.

குருநகர்
[15178]

---

# பாண்டிச்சேரி அரசு கவிழும்?

பாண்டிச்சேரி, டிச 22

பாண்டிச்சேரி தி.மு.க. அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை, அந்த அரசில் அமைச்சராக இருந்த - சுயேச்சை உறுப்பினரான - கமலக்கண்ணன் என்பவரும் விலக்கிக் கொண்டார்.

இதனையடுத்து பாண்டிச்சேரியில் தி.மு.க. அரசு கவிழ்ந்தது. இந்திரா காங்கிரஸ் தலைமையிலான கூட்டரசு ஏற்படுவது உறுதியாகியிருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ-எ)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



வீரஜனனம்:
24 - 08 - 1970

வீரமரணம்:
09 - 11 - 1990

## உடையார் மகாராசா

(லோலோ)

தாயக மண் மீட்புக்காய் தீரமுடன் போராடி வீரமரணமடைந்து நாற்பத்தைந்து நாட்கள் ஓடி மறைந்தாலும் நீ உருவாக்கிய தரமான இளம் வேங்கைகள் உன் தமிழ் ஈழக் கனவை நனவாக்கும் என்ற உறுதியுடன் உன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

நா. முருகையா

முதலியார் வீதி,
அளவெட்டி.

[15197]

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## நன்றி நவிலலும்

திருமதி

## அன்னபூரணிப்பிள்ளை ஐயம்பிள்ளை

தோற்றம்: 10-06-1906

மறைவு: 22-11-1990

அன்புத் தெய்வமே! எங்களையெல்லாம் ஆறாத் துயரிலாழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா, உங்கள் நினைவலைகளால் ஏங்கித் தவிக்கும் நிலையில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றி எங்களுக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, அவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று 22-12-90 சனிக்கிழமை நடைபெறவிருப்பதால், அதில் பங்குபற்றும் வண்ணம் உற்றார். உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பிட்டப்பிள்ளைகள்.

58, இந்துக்கல்லூரி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(15194)

---

# ஓராண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
17 - 03 - 1928

மறைவு:
22 - 12 - 1989

## றாபி சோதிமணி தேவராசா

''ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே -
மரணத்திலும் மறவாதீர்கள்''

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 22 - 12 - 90 காலை C. S. I. ஆலயத்தில் நடைபெறவுள்ள ஆராதனையில் பங்கு கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

[15133]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அவகாசம் தேவை

1991 உலகில் ஒரு பெரிய யுத்தத்தைக் கொண்டு வரும் ஆண்டாக அமையுமோ என்ற சந்தேகத்துடனேயே அதனை எதிர் கொள்ளப் போகிறோம். ஈராக் அதிபர் சதாம் ஹுசெயின் தோற்றுவித்த வளைகுடா நெருக்கடி அந்தச் சந்தேக நிலையை உருவாக்கி உள்ளது

ஆகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி தனக்கு அண்டை நாடாக இருந்த குட்டிக் குவைத்தை ஆக்கிரமித்த ஈராக், ஐ. நா. வின் நெருக்குதலுக்குக் கூடப் பணியாது, தனது அத்துமீறலை நிலை நிறுத்தப் பார்க்கிறது. பொருளாதாரத் தடை கூட சதாமை மசிய வைக்கவில்லை. உலகளாவிய நிர்ப்பந்தங்களும், வற்புறுத்தல்களும் வந்த போதிலும் விட்டுக் கொடுக்கும் நிலையில் அவர் இல்லை.

வளைகுடா நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவது சம்பந்தமான முயற்சிகளில் இடைக்கிடையே நம்பிக்கை ஒளிக்கீற்றுகள் தோன்றினாலும் ஈராக்கும் அமெரிக்காவும் அவற்றை மாறி மாறி அழித்துவிடுகின்றன, ஈராக் மீது ஆயுத பலத்தைப் பாவித்து குவைத்தை விடுவிப்பது என்ற ஐ. நா. தீர்மானமும் ஈராக்கிற்கு உறைத்ததாகத் தெரியவில்லை.

இதே வேளை, அமெரிக்காவின் போக்கும் யுத்தத்தை நாடியதாகவே இருக்கிறது. குவைத் மக்கள் மீது இருக்கும் அக்கறையைவிட, அரபு நாடுகளின் எண்ணெயிலேயே அதற்குக் கூடுதல் சிரிசனை இருப்பது நன்றாகத் தெரிகிறது. தான் அந்தப் பகுதியின் செல்வாக்கும், அதிகாரமும் உள்ள ஒரு பொலிஸ்காரனாக மாறவேண்டும் என்ற அமெரிக்காவின் உள் நோக்கத்தைச் சற்று ஆழ்ந்து நோக்கின் புரிந்து கொள்ளலாம்.

ஒரு சுதந்திர நாட்டைப் பலாத்காரமாக ஆக்கிரமித்து, அடிமை கொள்ளும் ஈராக்கின் ஈனச் செயல் சகிக்க முடியாதது; அநாகரிகமானது. அதில் எவருக்கும் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் அதனைச் சாட்டாக வைத்து அமெரிக்கா ஒரு யுத்தத்தை மூட்டி உலக மக்களை இன்னற்படச் செய்வதையும் அனுமதிக்க முடியாது. ஒரு சில லட்சம் மக்களுக்கு விடுதலை தேடிக் கொடுப்பதற்காக, அவசரப்பட்டு உலகின் கோடானு கோடி மக்களை யுத்தப்பாதிப்புக்கு ஆளாக்குவது ஒவ்வாதது.

அமெரிக்காவின் போர் நோக்கம் ஏகாதிபத்தியச் சாதிகார வெறி, ஐ நா, சபையையும் அவசரப்பட வைத்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். ஆத்திரக்காரனுக்கும், அவசரக்காரனுக்கும் புத்தி மத்திமம். அமெரிக்காவின் அவசரம், யுத்தம் ஒன்றுக்கு வழி செய்வதை எவ்வாறு அனுமதிக்க முடியும்?

ஈராக்கை வழிக்குக்கொண்டு வருவதற்கு பலாத்காரத்துக்குப் பதில் அமைதி வழி நெருக்குதல்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது பரீட்சித்துப் பார்த்திருக்கலாம் அல்லவா?

எனவே ஜனவரி 15 ஆம் திகதிக்குப் பின்னர் வன்செயல் மூலம் தீர்வு - யுத்தத்தின் மூலம் தீர்வு — என்ற கால அவகாசத்தை மேலும் நீடிக்க வேண்டும். ஒரு யுத்தத்தை ஆரம்பிப்பது இலகுவானது. ஆனால் அதன் விளைவுகள் உலக மக்களை பாரதூரமாகப் பாதிக்கும் என்பதை அமெரிக்காவும், ரஷ்யாவும் ஏன் ஐ. நாவும் மறந்துவிடலாகாது.

## முகாம் தகர்க்க 62 புலிகள்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இரண்டாவது வெற்றிகர தாக்குதல் முயற்சி நடத்தப்படும் வரை, இராணுவத்தினரை மாங்குளம் முகாமுக்குள்ளேயே வைத்திருப்பதற்காக நடந்த மோதல்களில் அவ்வப்போது 16 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

மொத்தமாக ஆறு மாத காலம் நடந்த மாங்குளப் போரில் 108 விடுதலைப் புலிகள் களப்பலியானார்கள்.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற தாக்குதலின் போது வீரமரணமடைந்தோர்:-

★ கருப்புலி லெப். கேணல் போர்க் [மா. அரசரத்தினம் - சேமமடு]
★ மேஜர் திலீப் [அ. விக்னேஸ்வரன் - கனகராயன்குளம்]
★ மேஜர் பிரபா [தி. தேவகிருஷ்ணகுமார் - செட்டிகுளம்]
★ மேஜர் சரன் [ந. நல்லதம்பி - வவுனிக்குளம்]
★ கப்டன் ஜெகன் [சு. சுரேஷ்குமார் - செம்மலை]
★ கப்டன் வதனன் [த. ராஜேஸ்வரன் - குமுழமுனை]
★ கப்டன் ரசாத் [சி. சுரேஷ்குமார் - கணேசபுரம்]
★ கப்டன் எழில் [த. செல்வராஜ் - உருத்திரபுரம்]
★ லெப். மாவி [து. முத்துக்குமார் - நெடுங்கேணி]
★ லெப். லிங்கம் [மு. சோதிவேல் - கிளிநொச்சி]
★ லெப் வாணன் [இ. இராசலிங்கம் - நட்டாங்கண்டல்]
★ லெப். கோபு [ம. கிறிஸ்ற்றிகுமார் - கண்ணாட்டி]
★ லெப். அருணா [வில்வராஜ் - அளம்பில்]
★ லெப். டெனி [சி. குசனகுமார் - செட்டிகுளம்]
★ 2 வது லெப். அன்பழகன் [ம. பாலகிருஷ்ணன் - ஒட்டுசுட்டான்]
★ 2 வது லெப். நிராஜ் [செ. சிவனேசச்செல்வன் - நெடுங்கேணி]
★ 2 வது லெப். டெனி [ந. உருத்திரமூர்த்தி - பன்குளம்]
★ 2 வது லெப்: பிரதீப் [அ. ஆனந்தராஜ் - மணல்குடியிருப்பு]
★ 2 வது லெப். அலன் [செ. கமலதோஜன் - உடப்பு]
★ 2 வது லெப். மகான் [பா. பாவரதன் - தண்ணீரூற்று]
★ 2 வது லெப். ரூபன [குமாரவேல் - விஸ்வமடு]
★ 2 வது லெப். குமரன் [பொ. சிவசக்தி - நெலுக்குளம்]
★ 2 ஆவது லெப். தும்பன் [து. பால்ராஜ் - சுழிபுரம்]
★ 2 ஆவது லெப். ரஞ்சன் [தி. சேவியர் செல்வம் - பனங்காட்டிக்கொட்டு]
★ 2 ஆவது லெப். ஜஸ்டின் [மா. மானில் - கல்மடு]
★ 2 ஆவது லெப். நாதன் [சி. ரவீந்திரன் - கிராஞ்சி]
★ 2 ஆவது லெப். ஜேசு [மு. மகேந்திரன் - வட்டுக்கோட்டை]
★ நியூட்டன் [ஆ. சுரேஷ் - வட்டக்கச்சி]
★ ரமணன் [யோ, ஜெயரட்ணம் - பரந்தன்]
★ ரம்சின் [ச. தமிழ்ச்செல்வன் - பூவரசங்குளம்]
★ கோறன்ஸ் [கோ. தவனேஸ்வரன் - புளியங்குளம்]
★ இம்ரான் [வே. குணதர்மன் - முத்தையன்கட்டு]
★ றொபேட் [ச. ஜெயசிங்கம் - முருங்கன்]
★ தனராஜ் [சி. ஆனந்தராஜ் - ஒட்டுசுட்டான்]
★ கரன் [ச. நவரத்தினம் - அளம்பில்]
★ கண்ணன் [சு. துரைராசா - கிளிநொச்சி]
★ விஜி (ம. நிக்சன் - ஜெயந்திநகர்)
★ விக (வே. குமார் - கிளிநொச்சி)
★ அர்ச்சனா (ம. ரவி - இரணமடு)
★ லிங்கராஜ் (சு. கதிர்காமநாதன் - வவுனியா)
★ கோணேஸ் (சு. ஜெயசீலன் - பாவற்குளம்]
★ லோகன் [இ. புகனேந்திரன் - கிளிவெட்டி]
★ ஆனந்தராஜ் [நா. தம்பிராஜ் - முத்தையன்கட்டு]
★ பிரபு
★ நிர்மல் [செட்டிகுளம்]

பெண் போராளிகள்:-

★ கப்டன் ரஜனி [ச. பரமேஸ்வரி - ஓமந்தை]
★ கப்டன் டோரா [க. பத்மாவதி - கரவெட்டி]
★ லெப். கோமகள் [சி. சித்திரா - கப்பூது]
★ 2வது லெப். கயோ [க. சுமதி - மட்டுவில்]
★ 2வது லெப். இலக்கனா [பா. பிறேமினி - கல்வயல்]
★ 2வது லெப். வைதேகி [சி. சீதா... - ...]
★ 2வது லெப். மரியாச்சி [கு. சிந்தனா - யாழ்ப்பாணம்]
★ 2வது லெப். பொன்னி [செ. பிரமிளா - பொலிகண்டி]
★ 2வது லெப். கிரிஜா [சு. ரட்ணவதி - கரணவாய்]
★ மரிஸ்டலா [பி. ஜெனோ - வெற்றிலைக்கேணி]
★ பௌாகிர் [சி. ஜமுனா - அளம்பில்]
★ தமிழ்ச்செல்வி [ச. சுமங்களா - அக்கரைப்பற்று]
★ கோணேஸ் [சு. பேபிசகிலா - உருத்திரபுரம்]
★ டயானா [த. கவிதா - அளம்பில்]
★ விக்ரோறியா [அ. புஷ்பசிறீயானி - ஊறணி]
★ சுதா [செ. சுதர்மினா - மாமூலை]
★ ரசிக்கா [ச. யாழினி - அரியாலை]

ஜூன் 16, 17 ஆம் திகதிகளில் நடந்த தாக்குதல்களின்போது வீரமரணமடைந்தோர்:-

★ மேஜர் சிங்கன் [இ. மகேஸ்வரன் - புதுக்குடியிருப்பு]
★ கப்டன் கஜன் (தி. பொன்னம்பலம் - மாமடு)
★ கப்டன் பவா [ச. சசீந்திரன் - கிளிநொச்சி]
★ கப்டன் விநோத் விக்னேஸ்வரன் - பூநகரி)
★ லெப், ஜமால் [சா. தம்பிராசா - கிளிநொச்சி]
★ 2 வது லெப் சர்வா [க. கோணேஸ்வரன் - மல்லாவி]
★ 2 வது லெப். கணேசமூர்த்தி [தி. சிவபெருமான் - இறம்பைக்குளம்]
★ மகான் [செ. சிவகுமார் - செட்டிகுளம்]
★ சசி [வ. குலபாலசிங்கம் - ஒட்டுசுட்டான்]
★ லோலோ [செ. சிவதாசன் - பெரியகுளம்]
★ ஜெசி [கோ. வின்சன் - ஒட்டுசுட்டான்]
★ காசீம் [அ பாஸ்கரன் - பாரதிபுரம்]
★ சுபாத் [ந. குமரகுருநாதன் - வவுனிக்குளம்]
★ இளங்கோ
★ காமினி
★ கமலன் [இ. மூர்த்தி - புளியங்குளம்]
★ சுரேன் [க. சிவபாலன் - செட்டிகுளம்]
★ ஐம்புலிங்கம் [து. அலஸ்ரீன் - பருத்தித்துறை]
★ விமல்
★ மூர்த்தி
★ மஜீத் [மயிலிட்டி]
★ ரோமியோ
★ செந்தூரன் [பா. இராகவன் - உருத்திரபுரம்)
★ அரி [ஆ. மோகனதாஸ் - ஸ்கந்தபுரம்]
★ சிறி
★ ரகு [அ. மகேந்திரன் - ஸ்கந்தபுரம்]
★ முகமட் [ஐ. குமரராசன் - வட்டக்கச்சி]
★ தினேஸ் [யோ. பிரபாகரன் - துணுக்காய்]
★ ஜமுனன் [க. இந்திரகுமார் - உருத்திரபுரம்]
★ இறி [க. ஆனந்தராசா - உருத்திரபுரம்]

தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களில் களப்பலியானோர்:-

★ லெப். நந்தன் (வீ. இராஜேஸ்வரன் - நெடுங்கேணி)
★ லெப். சுதாகர் (ந. இராசேஸ்வரன் - முல்லைத்தீவு)
★ டசுமின் (நா. பாலசுப்பிரமணியம் - கிளிநொச்சி)
★ ஜெரோ (செ. மணிவாசகர் - நெடுங்கேணி)
★ வேங்கை (ஆ. மயில்வாகனம் - கிளிநொச்சி)
★ ராஜீ (கா. தியாகராஜா - ஒட்டுசுட்டான்)
★ சலீம (சி. யோகநாதன் - விஸ்வமடு)
★ கபில் (சு. முருகேந்திரன் - உடையார்கட்டு)
★ ஜசீர் (கி. கிரிசாந்தன் - ஒட்டுசுட்டான்]
★ மிதுனன் (மா. சிறீதரன் - சிலாவத்தை)
★ குணம்
★ சான்ஸ்
★ மார்கிரட் (க. கிருஷ்ணகுமார் - பூதன்வயல்)
★ அருள் (வே. சுகுமார் - நெடுங்கேணி)
★ கென்சன் (வ. சிறீகுமார் - வண்ணான்குளம்]
★ கமல் (க. உதயகுமார் - திருநகர்)

[உ-6]

## 110 சிப்பாய்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர்- மாங்குளம் முகாமிலிருந்து ஐந்து மைல் தொலைவில் உள்ள- கனகராயன்குளம் காட்டுப் பகுதியில் வைத்து ஐந்து ஹெலிக்கொப்டர்கள் மூலம் மீட்கப்பட்டனர் என்றும்-

அதேபோல் இரண்டு நாட்களின் பின்னர் மீண்டும் ஒருமுறை அதே பகுதியில் வைத்து மேலும் சில சிப்பாய்கள் ஹெலி மூலம் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காட்டுக்குள் தப்பி ஓடிய சிப்பாய்களைத் தேடி விடுதலைப் புலிகள் நடத்திய வேட்டையின் போதும் சில சிப்பாய்கள் தாக்குதல் ... [illegible] ...தனர். (உ)

அரச நிவாரணம்:

## அகதி முகாம்களுக்கே முதலிடம் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ் மாவட்டத்தில் உள்ள ப.நோ கூ சங்கங்கள் உணவுப் பொருள் விநியோகத்தில் அகதி முகாம்களுக்கே முதலிடம் வழங்க வேண்டும். அகதி முகாம்களுக்கென 4 வாரங்களுக்குரிய பொருள்களை இருப்பில் வைத்துக் கொண்டே மற்றவர்களுக்குரிய விநியோகங்களை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபரால் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் ப.நோ.கூ. சங்கத் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சுற்று நிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:-

★ முகாம்களில் உள்ளவர்களுக்கு வாராந்த உலர் உணவு விநியோகத்தை மறு அறிவித்தல் வரை வழங்குதல் வேண்டும்,

★ ப.நோ.கூ. சங்கங்களின் கையிருப்பில் தேவையான பங்கீட்டுப் பொருள்கள் இல்லாதிருப்பின் முன்கூட்டிய உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியுடன் தொடர்பு கொண்டு, அவர் மூலம் வேண்டிய உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். [ஓ-6)

## தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி

யாழ்ப்பாணம், டிச. 22

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப் பள்ளியில் ஆண்டு 1க்கு பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு விண்ணப்பித்தோருக்கான நேர்முகச் சந்திப்பிற்குரிய கடிதங்கள் 25 ஆம் திகதி வரை தினமும் காலை 10. 00 மணிக்கு முன் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய முன்றலில் வைத்து வழங்கப்படும். [இ]

## மயிலணியில் பரிசளிப்பும் கலை நிகழ்ச்சிகளும்

மயிலணி, டிச. 22

மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் இன்று 22ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு வீட்டுத் தோட்டப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் நடைபெறுகிறது

பவளவிழாவை முன்னிட்ட விவசாய விழாவையொட்டி இந்த நிகழ்ச்சி இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்று விவசாய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ)

## இன்று நல்லை ஆதீனத்தில்

யாழ்ப்பாணம், டிச.22

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று சனிக்கிழமை புராணபடன சபையினரால் மூன்றாம் திருமுறை முற்றோதல் பூர்த்தி விழாவும் —

நாளை ஞாயிற்றுக் கிழமை, திருவெம்பாவை தினங்களையொட்டி திருவாதவூரடிகள் புராணபடன ஆரம்பமும் இடம் பெறும். (இ)

## மாங்குளத்தில் "போர்க்"

உளங்கவர் உருவி னாளன்
உயிர் விடுங் காலே எய்த
கலக்கமொன் றில்லா நெஞ்சன்
தலைவன்பால் வேதுரைப்பான் — கேளாய்:

★

தலைவனைத் தழுவி நின்று
"தாயகம் மீட்பேன் இன்று"
எனக் கனவினில் அடைந்த ஆசை
கடிதினில் முடிப்பேன் என்றான்.

★

தலைவனின் முகத்தைப் பார்த்தேன்
அவன் கண்களும் கலங்கக் கண்டேன்
கட்டித் தழுவினார் இருவருமே
ஓர் கணம் மட்டும் தான்.

★

திண்மைசேர் மனதின் ஆளன்
திறமையை வியந்திருக்கும் காலை
வந்ததே அவன் தன் வேளை
எழுந்தனன்; சென்றான்; கண்டேன்.

★

ஓர்மமே உருக்கொண்டான் போல்
ஓட்டவே போனான் பாரீர்
பாரிய சக்கை வண்டி
அதைமோதியே வெடிக்கும் வேளை
தகர்வர் எம் பகைவர் எல்லாம்.

★

கைகள் நீட்டியே நிற்கும் தாயின்
மடியினில் சென்று வீழும்
நீர்மையே போன்று சென்றான்
நிகரிலாப் "போர்க்" எம்பாலன்:

★

பாலகன் போர்க்கின் பாலே
பரிவு சேர் மனசு கொள்மின்
பதங்கள் அறுத்து எம்மைக்
காப்பதற் கோடிச் சென்றான்.

★

தன் உயிரையே மாய்த்து
மண்ணில் உயர்ந்தவோர் நிலையைாய் பெற்றான்
இம் மண்ணில் நாம் இருக்கும் மட்டும்
அவன்பால் மணிவிளக் கேற்றிவைப்போம்.

—ராம்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் வெற்றி நாள்: இன்று நடக்கும் கூட்டங்கள்

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த கரும்புலி லெப்டினன்ட் கேணல் போர்க் உட்பட 62 வீர வேங்கைகள் நினைவு நாளையும் வெற்றி நாளையும் ஒட்டி இன்று பல்வேறு இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெற இருக்கின்றன அவற்றின் விபரம் வருமாறு:-

வலிகாமம்;- நல்லூர் சந்தசுவாமி கோவில் வடக்கு வீதி, மாலை 4 மணி.

தென்மராட்சி:- சாவகச்சேரி இந்து மைதானம், மாலை 5 மணி.

தீவுப்பகுதி;- புங்குடுதீவு ம. வி. மைதானம், இரவு 7 மணி.

வடமராட்சி:- நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழக மைதானம், மாலை 4 மணி.

இந்தக் கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர்களும் மற்றும் முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்வர் எனத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

# இன்று இரத்த தானம்

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றி நாளையும், கரும்புலி லெப். கேணல் போர்க்கின் நினைவு தினத்தையும் முன்னிட்டு, இன்று யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் இரத்த தானம் செய்யவுள்ளனர்.

மறுமலர்ச்சிக் கழகம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [ஓ 6]

# வெள்ளம், தொற்று நோய்; கிழக்கில் 291 அகதிகள் பலி!

யாழ்ப்பாணம், டிச. 22

கிழக்கில் இன அழிப்பு காரணமாக இடம் பெயர்ந்து காடுகள், சேனைகள் மற்றும் வயல்களில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருக்கும் தமிழ் அகதிகளில் சுமார் 50 ஆயிரம் பேர் தற்போதைய மழை வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் வெள்ளம் மற்றும் தொற்று நோய்களினால் இதுவரை 105 குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட 291 அகதிகள் உயிரிழந்ததாக புள்ளி விவரங்கள் தெரிவித்தன. (உ)

# ஷார்ஜா கிண்ணம் பாகிஸ்தானுக்கு!

ஷார்ஜா, டிச. 22

ஷார்ஜா கிண்ணத்தை பாகிஸ்தான் சுவீகரித்துக் கொண்டது.

நேற்று நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணியை பாகிஸ்தான் 49 ஓட்டங்களால் தோற்கடித்தது.

வியாழன் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தானை இலங்கை அணி 6 விக்கட்டுகளால் தோற்கடித்திருந்தது தெரிந்ததே.

இந்த இரண்டு ஆட்டங்களிலும் பெற்ற ஓட்ட எண்ணிக்கை சராசரியின்படி வெற்றி பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டது.

இந்துப் போட்டியில் இலங்கையும் பாகிஸ்தானும் மட்டுமே கலந்துகொண்டன. [உ-எ]

# ஆஸ்பத்திரியில் விசர் நாய்!

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி ஆஸ்பத்திரி வார்ட்டுக்குள் விசர் நாய் ஒன்று புகுந்ததால் நோயாளர்களும் ஊழியர்களும் பெரும் அல்லோலகல்லோலப் பட்டனர்.

பின்னர் அந்த நாய் சுட்டுக் கொல்லப்பட்டது. [உ-117]

# போர் அழிவிலிருந்து காப்பாற்ற மக்களை அகற்றும் பணி பக்தாத் நகரில் ஆரம்பம்

பக்தாத், டிச. 22

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து பத்து லட்சம் மக்களை வெளியேற்றும் பணியை நேற்றுக்காலை அரசு அதிகாரிகள் ஆரம்பித்தனர். நகரின் மொத்த சனத்தொகையில் இது நான்கில் ஒரு பங்கு ஆகும்.

ஈராக் மீது அமெரிக்கா திடீர் போர் ஒன்றைத் தொடுக்குமிடத்து மக்களை அழிவில் இருந்து காப்பாற்றும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்படுவதாக ஈராக் கூறியுள்ளது. [ஓ-எ]

# 2 ஆம் கட்ட நிவாரணம்:

# ப. நோ. கூ. சங்கங்களிடம் கையிருப்புக் குறைவாம்

அனைவருக்குமான விசேஷ நிவாரணத்துக்கு உரிய இரண்டாம் கட்ட உணவுப்பொருள்களை சரிவர விநியோகிக்க முடியாத நிலையில் ப. நோ. கூ. சங்கங்கள் உள்ளனவாம். பொருள்கள் கையிருப்பு குறைவாக இருப்பதே அதற்குக் காரணமாம்.

நேற்றுக் காலை நடைபெற்ற யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் வருடாந்தக் கூட்டத்தில் இது குறித்துச் சுட்டிக் காட்டப்பட்டது.

யாழ். செயலகத்தின் மூலம் போதிய உணவுப் பொருள்கள் வழங்கப்படாமையினாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூட்டத்தில் விவரிக்கப்பட்டது.

கூட்டுறவுச் சபையின் தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடந்த பிரஸ்தாப கூட்டத்தில், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. சி. லிங்கநாதனும் சமுகமளித்திருந்தார். (அ-3)

# கல்வி டிப்ளோமா.!

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாக இந்தப் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை கொழும்பிலேயே நடத்தப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் யாழ். கல்வி அலுவலகத்திலும், யாழ் பல்கலைக் கழக தமிழ்த் துறைப் பிரிவிலும் தற்போது வைக்கப்பட்டுள்ளன.

இதே சமயம் —

பல்கலைக்கழகத்தில் நடத்தப்படும் மேற்படி டிப்ளோமா பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி நெறி முடியும் வரை — ஒரு வருட காலத்துக்கு — சம்பளத்துடன் லீவு வழங்கவும்—

அந்தக் காலத்தில் முழு நேரமாக பயிற்சி நெறியைப் பயிலுவதற்கும் கல்வி அமைச்சு வசதி செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் இப் பயிற்சி நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டோர் பகுதி நேரமாகவே இதனைப் பயின்று வந்தனர் என்பது தெரிந்ததே.

இம்முறை இந்தப் பயிற்சி நெறியைத் தொடர்வதற்கு 75 பேர் தெரிவு செய்யப்பட இருப்பதாக யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தெரிவித்தார். [உ-3-6]

# ராஜினாமாவை வாபஸ் பெறுமாறு வற்புறுத்து

மாஸ்கோ, டிச 22

சோவியத் வெளியுறவு அமைச்சர் திரு. எட்வர்ட் ஷெவர்நாட்ஸேயின் ராஜினாமாவை வாபஸ் பெறும்படி ஜனாதிபதி மிக்கெய்ல் கோப்பச்சேவ் கேட்டுள்ளார்.

# அரச அதிபர்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வைச் சங்க வாகனத்தில் இரு அரச அதிபர்களும் செல்வதற்கு முதலில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன என்றும்–

இது தொடர்பாக அனுமதி பெறுவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கூட்டுப்படைத் தலைமையகத்துடன் தொடர்பு கொண்டபோது அரச அதிபர்கள் இருவரையும் வாகனத்தில் கூட்டிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் யாழ். அரச அதிபர் இன்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வாகனத்தில் கிளிநொச்சி வரை சென்று, அங்கிருந்து மாற்று ஒழுங்குகள் மூலம் கொழும்பு செல்வார் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. [உ-3]

# யாழ். மாநகரப் பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வரி செலுத்துவதில் சலுகை!

யாழ்ப்பாணம், டிச. 22

கடந்த ஜூன் மாதம் முதல் இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கைகளினால் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் சேதமுற்ற வீடுகள், கடைகள் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு வரி செலுத்துவதில் சலுகை வழங்கப்படவிருக்கிறது.

தமக்கு ஏற்பட்ட சேதங்களை உறுதிப்படுத்துவோருக்கு சோலை வரி, வியாபார வரி ஆகியவற்றிலும்–

மாநகர சபைக்குரிய கட்டடங்களை உபயோகிக்கும் வாடிக்கையாளர்களுக்கு வாடகையிலும் சலுகை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றிய விபரம் விரைவில் அறிவிக்கப்படும் என்று மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [உ-3]

## ஆணா - பெண்ணா பரிசோதனைக்கு தடை

குழந்தை பிறப்பதற்கு முன்னர் அது ஆணா– பெண்ணா என்பதைக் கண்டு பிடிக்கும் வைத்திய பரிசோதனைகள் நடத்தப்படுவதை இந்திய அரசு தடை செய்யத் தீர்மானித்து உள்ளது.

# ஒரு கோடி ரூபா பெறுமதியான...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| | ஜி. பி. எம். ஜி மேலதிக சுடுகுழல் | – 02 |
| | ஜி. பி. எம். ஜி ரவை (லிங்குடன்) | – 2400 |
| | ஜி. பி. எம். ஜி லிங் | – 4045 |
| ★ | 303 எல். எம். ஜி | – 07 |
| | 303 எல். எம். ஜி மேலதிக சுடுகுழல் | – 09 |
| | 303 எல். எம். ஜி. ரவை | – 4255 |
| | 303 ரவைக் கூடுகள் | – 46 |
| ★ | ஏ. கே. எல். எம். ஜி. | – 11 |
| | ஏ. கே. எல். எம். ஜி. ரவைக் கூடு | – 30 |
| | ஏ. கே. எல். எம். ஜி லிங் | – 4275 |
| ★ | ஆர். பி. ஜி. | – 07 |
| | ஆர். பி. ஜி. ஷெல் (துருப்பு எதிர்ப்பு) | – 13 |
| | ஆர். பி. ஜி. ஷெல் (வாகன எதிர்ப்பு) | – 51 |
| | ஆர். பி. ஜி. புரொப்லர் | – 66 |
| ★ | 40 மி. மீ. கிரனைட் பிஸ்ரல் | – 01 |
| | 40 மி. மீ. ஷெல் | – 12 |
| ★ | 81 மி. மீ. மோட்டர் | – 04 |
| | 81 மி. மீ. ஷெல் | – 42 |
| | 81 மி. மீ. பூஸ்ரர் | – 140 |
| ★ | 60 மி. மீ. இருகாலி மோட்டர் | – 06 |
| | 60 மி. மீ. கொமாண்டோ மோட்டர் | – 02 |
| | 60 மி. மீ. ஷெல் | – 130 |
| | 60 மி. மீ. வெளிச்சக் குண்டுகள் | – 10 |
| | 60 மி. மீ. மோட்டர் இருகாலி | – 01 |
| | 60 மி. மீ. மோட்டர் பேஸ்பிளேட் | – 01 |
| ★ | 2 அங்குல மோட்டர் | – 05 |
| | 2 அங்குல ஷெல் | – 430 |
| | 2 அங்குல வெளிச்சக் குண்டுகள் | – 08 |
| ★ | ரீ 56 – சாதாரண வகைத் துப்பாக்கிகள் | – 13 |
| | ரீ.56 – 1 ரக துப்பாக்கிகள் | – 16 |
| | ரீ.56 – 2 ரக துப்பாக்கிகள் | – 26 |
| | ரீ.56 புதிய வகைத்துப்பாக்கிகள் | – 07 |
| | ரீ.56 ரவைக் கூடுகள் | – 114 |
| ★ | ரீ.81 ரக துப்பாக்கிகள் | – 25 |
| | ரீ.81 ரவைக் கூடுகள் | – 81 |
| | ரீ.81 ரைபிள் கிரனைட் | – 07 |
| ★ | எம்.70 ரக துப்பாக்கிகள் | – 03 |
| | எம் 70 ரவைக்கூடுகள் | – 30 |
| ★ | 303 ரக துப்பாக்கிகள் | – 06 |
| | 303 ரவைக் கூடுகள் | – 03 |
| ★ | ரிப்பிட்டர் ரக துப்பாக்கிகள் | – 07 |
| ★ | வேட்டைத் துப்பாக்கி | – 02 |
| ★ | எல் 3 லிங் | – 6,000 |
| | 82 மி. மீ. ஷெல் | – 26 |
| | 82 மி. மீ. தோட்டா | – 24 |
| | 82 மி. மீ. பியூஸ் | – 24 |
| | 82 மி. மீ. பூஸ்ரர் | – 72 |
| | எம்.4 [ஜே. ஆர் ] கைக்குண்டு | – 76 |
| | எம்.73 கைக் குண்டுகள் | – 214 |
| | ரி. என். ரி. கைக்குண்டுகள் | – 79 |
| | புகைக் குண்டுகள் | – 03 |
| | சாதாரண வெளிச்சக்குண்டுகள் | – 02 |
| | கிளைமோர் | – 09 |
| | வெடி அதிர்வு கட்டுப்பாட்டு றோல் | – 01 |
| | மிதி வெடிகள் | – 60 |
| | எச்சரிக்கை மிதிவெடிகள் | – 20 |
| | வெடிமருந்துப் பெட்டி | – 2½ |
| | தொலைத்தொடர்பு சாதனங்கள் | – 02 |
| | தலைக் கவசம் | – 69 |
| | தண்ணீர்ப் போத்தல் | – 13 |
| | சாப்பாட்டுப் பெட்டி | – 03 |
| | மழைக் கவசம் | – 02 |
| | தோற்பை | – 09 |
| | தொலைத் தொடர்பு சாதன கோல்சர் | – 07 |
| | குண்டு துளைக்காத அங்கி | – 15 |
| | குண்டு துளைக்காத கோல்சர் | – 03 |
| | கரிமருந்து | – 25 கிலோ கிராம் |
| ★ | 7. 62 நடுத்தர ரவைகள் | – 79,200 |
| | 7. 62 தேட்டோ ரவைகள் | – [illegible] |
| | எல். 3 ரவை (லிங்குடன்) | – 3,800 |

# சமரச....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கைகளை நிறுத்தி, ஆகக் குறைந்தது தொடர்ந்து இரண்டு வருடங்களுக்கு வடக்கு, கிழக்கில் அமைதி நிலவுவதை ஸ்ரீ லங்கா அரசு உறுதி செய்ய வேண்டும்.

★ இந்த இரண்டு வருட காலத்தினுள் ஈழத் தமிழரின் அபிலாஷைகளைத் தீர்க்கத் தக்கதாக அவர்களின் ஆட்சியுரிமையை நிலைநிறுத்தக் கூடிய நடவடிக்கைகளை ஸ்ரீ லங்கா அரசு எடுக்கவேண்டும்.

— இந்த இரண்டு விடயங்களுமே இந்த சமரசத் திட்டத்தில் முக்கியமாக இடம் பெற்றிருப்பதாகத் தெரிய வந்தது.

வடக்கு, கிழக்கில் தமிழ்ப் போராளிகளுக்கு எதிராக யுத்தம் புரிவதற்குத் தேவையான ஆயுதங்களை ஸ்ரீலங்கா அரசுக்கு சீனா வழங்க முன் வந்த நிலையில் மேற்குலக நாடுகள் இத்தகையதோர் முயற்சியை ஆரம்பித்திருக்கின்றன. இது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை போன்ற நாடுகளில் தமது பிடி நழுவிப் போகாமல் பார்ப்பதற்காக மேற்குலக நாடுகள் எடுக்கும் முயற்சியாக இருக்கக் கூடும் என [illegible] அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [உ[

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா குமாரலிங்கம்

திரு. செல்லையா குமாரலிங்கம் [ Rtd. Post Master) காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையா [Teacher] – பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், இதயகுமார் (Germany), ரஞ்ஜகுமார் [Lecturer, Dept. of Economics, University of Jaffna], பிரேமகுமார் [Paris Travels Pvt Ltd –Colombo], சுமித்தா, யசோதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குமாரசுவாமி [Rtd A. G. A ], குமாரசிவம் [ C. T. B ], செல்வமணி செல்லையா [ Teacher, Nunavil G T. M. S ] ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற அருளையா அருளம்மா [Malayan Pensioneer நீர்வேலி] ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் [24-12-1990] திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு. ரஞ்ஜகுமார்

நுணவில் மேற்கு,
சாவகச்சேரி. [15198]

## மாணிக்கம் ஐயரசு

[முன்னாள் அச்சுவேலி மினிபஸ் நேரக் காப்பாளரும், திருகோணமலை பொலீஸ் உத்தியோகத்தரும்]

மாணிக்கம் ஐயரசு 18-12-90 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் மாணிக்கம்–கண்மணி தம்பதிகளின் அன்பு மகனும், தயாநிதி, ரூபநேசன், வில்வக்கோன் [மினிபஸ் நேரக் காப்பாளர், அச்சுவேலி], மாளசூரி, காலம் சென்ற அதிபதி, இளம்பிறைமான், நித்திலா, மதிநிலா ஆகியோரின் சகோதரருமாவார்.

தகனக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அச்சுவேலி வடக்கு [15255] கதிர் மாணிக்கம்

## கதிரவேலு முத்தாச்சி

சரவணையைச் சேர்ந்த கதிரவேலு முத்தாச்சி காலமானார். இவர் கதிரவேலுவின் அன்பு மனைவியும், பாக்கியலக்ஷ்மி, பேரம்பலம், நகுலாம்பிகை, பரமானந்தசிவம், இரட்சணியதேவி, மகேஸ்வரி, சண்முகராஜா [அழகர் மில், வட்டுக்கோட்டை] கிருபாதேவி, சண்ணுத்துரை ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னுத்துரை, பாக்கியலக்ஷ்மிசோமசேகரம், இராஜேஸ்வரி, பொன்னுத்துரை [சவுதி], சிவராமலிங்கம், [பெற்றோலியம் கூட்டுத்தாபனம், கிளிநொச்சி] யோகலக்ஷ்மி, தங்கராஜா [வவுனியா வர்த்தகர்] ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்,

ஈமக்கிரியைகள் இன்று சனிக்கிழமை மாலை 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. கண்ணுத்துரை

சரவணை. [14867]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org